Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556
ISO : 9001:2015; QT-57977/1125
DHINATH DHALAM Tamil & English daily Paper
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 97 | சனிக்கிழமை Saturday | 07.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

## 2,104 பேருக்கு வேலைவாய்ப்பு...

# கும்மிடிப்பூண்டியில் புதிய உற்பத்தி ஆலை

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (6.02.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் 2,091 கோடி ரூபாய் முதலீட்டில், 2,104 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் அமைத்துள்ள, அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாடு, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாகவும், தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் விளங்கி வருகிறது. மாநிலத்தில் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மாநில பொருளாதாரத்தை மேன்மேலும் மேம்படுத்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட்

ஜப்பான் நாட்டை சேர்ந்த மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன், ஆற்றல் மற்றும் மின்சார அமைப்புகள், தொழில்துறை ஆட்டோமேஷன், தகவல் மற்றும் தொடர்பு அமைப்புகள், வீட்டு உபயோகப் பொருட்கள், மின்சார மற்றும் மின்னணு உபகரணங்களை தயாரிப்பதில் இணையற்ற நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளது. மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட், இந்த உலகளாவிய முன்னணி நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.

இந்நிறுவனம், 2091 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 2104 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) உற்பத்தி ஆலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 2023-ஆம் ஆண்டு மே மாதம் மற்றும் 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக,2023-ஆம்ஆண்டு செப்டம்பர் மாதத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் இத்திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்வானது, திட்டங்கள் செயல்பாட்டுநிலைக்குமுன்னேற்றம் பெற, அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் Mitsubishi Electric நிறுவனம் அமைத்துள்ள இத்தொழிற்சாலை, இந்தியாவில் அதன் முதலாவது அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) உற்பத்தி ஆலை என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிப்புற அலகுகள், உட்புற அலகுகள் மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) ஒரே இடத்தில் உற்பத்திசெய்யும்முதலாவது தொழிற்சாலையாகவும் இது இருக்கும். இந்நிறுவனம், இத்திட்டத்தில் இதுவரை 1633 கோடி ரூபாய் முதலீடு மேற்கொண்டுள்ளதுடன், 200-க்கும் மேற்பட்ட மகளிர் உட்பட 629 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் அளித்துள்ளது.

# சமூக வலைதளங்களில் நேரத்தை வீணாக்காதீர்கள்; மாணவர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை



புதுடில்லி: "படிப்பை எப்போதும் சுமையாக நினைக்காதீர்கள். மதிப்பெண்களை இலக்காக கொள்ளாமல் புரிந்து கொண்டு படிக்கவேண்டும்"என பொதுத்தேர்வு எழுத உள்ள மாணவர்களுடன் கலந்துரையாடி பிரதமர் மோடி அறிவுரை வழங்கினார்.

குஜராத்தில் உள்ள தேவமோக்ரா, தமிழகத்தில் கோவை, சத்தீஸ்கரில் ராய்ப்பூர், அசாமில் குவஹாத்தி மற்றும் டில்லியில் வசிக்கும் மாணவர்களுடன் தனது இல்லத்தில் மோடி கலந்துரையாடினார். அவர் பொதுத்தேர்வுக்கு பதட்டம் இன்றி தயாராவது குறித்து மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.அப்போது பிரதமர் மோடி கூறியதாவது: * மதிப்பெண்களை இலக்காக கொள்ளாமல் புரிந்து கொண்டு படிக்க வேண்டும். படிப்பை எப்போதும் சுமையாக நினைக்காதீர்கள். மதிப்பெண்களை இலக்காக கொள்ளாமல் புரிந்து கொண்டு படிக்கவேண்டும்.

*ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எந்த இடத்தை பிடிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வெற்றி, உங்கள் பெற்றோரின் மரியாதையாக மாறும். * பெற்றோர், ஆசிரியர்கள் அல்லது சக நண்பர்கள் என்ன கூறினாலும் உங்களுக்கு தோன்றும் யோசனைகளை மனதில் வைத்து அதனை பின்பற்றுங்கள். வாழ்க்கையில் எல்லாவற்றிலும் சமநிலை இருக்க வேண்டும்.*வாழ்க்கை திறன்களும், தொழில் சார் திறன்களும் சம அளவில் முக்கியமானவை. அவை கல்வி மூலமாக மட்டுமே பெற இயலும். அரை மனதுடன் கல்வி பயின்றால் வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்றாது. அனைவரும் முழு கவனத்துடன்கல்விகற்கவேண்டும்.*ஒவ்வொருவரும் வாழ்க்கையில் என்ன சாதித்துள்ளனர் என்பதில் கவனம்செலுத்த வேண்டும். நமது இலக்கு எட்டக்கூடியதாக இருக்க வேண்டும், ஆனால் எளிதில் அடையக்கூடியதாக இருக்கக்கூடாது. அப்போதுதான் நீங்கள் எப்போதும் வெற்றியடைவீர்கள்.

*நீங்கள் கேமிங்கில் ஆர்வமாக இருக்கிறீர்கள். ஆனால் இந்தியாவில் இண்டர்நெட் (டேட்டா) மலிவானது என்பதற்காகநேரத்தை கடத்த அதை பயன்படுத்தக் கூடாது.

"பணத்திற்காக கேமிங்கில் ஈடுபடுபவர்கள் அழிந்து போவார்கள். நாட்டில் சூதாட்டத்தை ஊக்குவிக்க வேண்டிய அவசியமில்லை. ஆன்லைன் சூதாட்டத்திற்கு எதிராக நான் ஒரு சட்டத்தை இயற்றியுள்ளேன்.

*நான் கடந்துபோனதைத் திரும்பிப் பார்ப்பதில்லை, வரப்போவதைப் பார்க்கிறேன். சில சமயங்களில் ஆசிரியர்கள் முக்கியமானவற்றை மட்டுமே கற்பிப்பார்கள்,நல்லமதிப்பெண்களைப் பெற உங்களுக்கு உதவ முடியும். *நல்ல ஆசிரியர் ஒட்டுமொத்த வளர்ச்சியில் கவனம் செலுத்துவார், எல்லாவற்றையும் கற்றுக்கொடுப்பார். வேகத்தை விட ஆசிரியரின் வேகம் ஒரு படி முன்னால் இருப்பதை உறுதி செய்வதே ஆசிரியரின் முயற்சியாக இருக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# தவெகவில் விருப்பமனு விநியோகம் தொடங்கியது; ஒன்றரை மணி நேரத்தில் 10,000 விருப்பமனுக்கள் விநியோகம், சி.டி.ஆர்.நிர்மல்குமார் பேட்டி




தமிழக வெற்றிக் கழகத்தில் விருப்ப மனுக்களை வினியோகி க்கும் பணி (பிப்., 06) தொடங்கியது. சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விருப்பமனுக்களைபெற நிர்வாகிகள் குவிந்து வருவதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசியல் களம், 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு ஆயத்தமாகி வருகிறது. இந்நிலையில், தவெக சார்பில்சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விரும்புவோருக்கு (பிப். 6) முதல் விருப்ப மனு விநியோகம் தொடங்கப்பட்டுள்ளது.

விருப்ப மனுக்களை பிப்.14 ஆம் தேதி வரை தவெக தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அக்கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டு ள்ளது. தவெக பொதுச் செயலாளர் என். ஆனந்த், தவெக மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ. செங்கோட்டையன் உள்ளிட்டோர் ரூ. 100 செலுத்தி தங்களதுவிருப்பமனுக்களைப்பெற்றுக்கொண்டனர்.

பனையூரில் நாளை முதல் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை விருப்ப மனுக்களைப் பெற்றுக் கொள்ளலாம். மனுவில் உள்ள அனைத்து விவர ங்களையும் முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் ஒப்படைக்கவேண்டும்என்று தவெக சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக பனையூர் அலுவலகத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விருப்ப மனுக்களைப் பெற நிர்வாகிகள் குவிந்து வருவதால்அப்பகுதியில்பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், தங்களுக்கு இடையூறு ஏற்படுவதாக அப்பகுதி மக்களில்சிலர் புகார் தெரிவித்துள்ளனர்.

"த.வெ.க.வில்ஒன்றரை மணி நேரத்தில் 10,000 விருப்பமனுக்கள்இன்று ஒரே நாளில் கொடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் நாளை மனு விநியோகம் செய்யப்படும்.

விருப்ப மனுக்களை பெற வருகிற 14-ந்தேதி வரை அவகாசம் இருக்கிறது. காலை 10 மணி முதல் 6 மணி வரை மனுக்களை பெற்றுக் கொள்ளலாம். எனவே, ஒரே நாளில் அனைவரும் வராமல் பொறுமையாக வாங்கிக் கொள்ளலாம்.

விஜய்யின் பெயரில் எவ்வளவு மனு வாங்கப்பட்டுள்ளது என்பது கணக்கிடப்பட்டு வருகிறது. மனுக்களை திரும்ப வழங்கும் நாள் குறித்து ஒரிரு நாட்களில் அறிவிக்கப்படும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## அத்திவாக்கம் ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தை காணொளி வாயிலாக முதலமைச்சர் திறந்து வைத்தார்

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட அத்திவாக்கம் ஊராட்சியில் 31,40,00 ரூபாய் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.



அப்போது காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் ஆலோசனைப்படி அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி கே.கண்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை ஒன்றிய குழு உறுப்பினர் பொற்செல்வி வெங்கடேசன் தலைமையில் செய்திருந்தார். இந்நிகழ்வில் மாவட்ட கவுன்சிலர் மாலதி செல்வராஜ், அச்சிறுப்பாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர் சீனிவாசன், ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி நடராஜன், துணைத் தலைவர் கோபால்,

ஊராட்சி மன்ற தலைவர் காஞ்சனா பலராமன், ஊராட்சி பிரதிநிதி ரமேஷ்,முருகன்,ஊராட்சி செயலர் செல்வம், காட்டுக்கூடலூர் சுப்பிரமணி, மற்றும் வார்டு உறுப்பினர்கள் அ.கிருஷ்ண மூர்த்தி வேளாங்கண்ணி மாலினி ராஜேஸ்வரி முனுசாமி மனோர்மணி உட்பட கிராம பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## பொற்பணங்கரனை ஊராட்சிமன்ற அலுவலகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்

### தி.மு.க மத்திய ஒன்றிய செயலாளர் டி,வி.கோகுலகண்ணன் பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பொற்பனங்கரணை ஊராட்சியில் ஊராட்சி மன்ற கட்டிடம் கட்டித் தர பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர் அதன் பேரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக ஊராட்சி மன்ற அலுவலகம்கட்டி முடிக்கப்பட்டது இந்த கட்டிடத்தை இன்று தமிழக முதலமைச்சர்



மு,க,ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி,வி,கோகுலக்கண்ணன் ரிப்பன் வெட்டி திறந்து ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகள் வைத்தனர் இதில் மாவட்ட குழு உறுப்பினர் கோ,வசந்தா வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீனிவாசன் ஜெயக்குமார் ஊராட்சி மன்ற தலைவர் கவிதா சம்பத் ஒன்றிய குழு உறுப்பினர் பார்த்தசாரதி,ஒன்றிய நிர்வாகிகள் து,கருணாகரன், சீனிவாசன், ரகு, இந்துமதி, லட்சுமணன்,துரைகணேஷ் , ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பொன்னன், ஊராட்சி செயலாளர் ஷகிலா பானு, வார்டு உறுப்பினர்கள் கமலக்கண்ணன்,அஞ்சலைவீரராகவன்,தேவி வெற்றிவேல், கலா கந்தன்,ரவி,கிளை செயலாளர் கே,கிருஷ்ணன், பணிதல பொறுப்பாளர் ஜெயபிரகாஷ் ஐயப்பா மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பிரதிநிதிகள் சுப்பிரமணி நாகப்பன் ஏழுமலை அன்பரசு ராஜவேல் பெருமாள் மோகன் அமாவாசை தனசேகர் கோட்டையான் பிரகாஷ் கோட்டையான் முருகவேல் தாமோதரன் பசுமலை செல்வராஜ் அம்மாவாசை தேவதாஸ் காளிதாஸ் ராஜேஷ் சூர்யாகுபேரன் ஜெகதீஷ் உள்ளிட்ட கலந்து கொண்ட நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவருக்கும் அறுசுவை வழங்கப்பட்டது



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த மைலம்பட்டி கிராமத்தில் எருதுவிடும் விழா நடைபெற்றது. புளியம்பட்டி, மைலம்பட்டி மற்றும் திப்பனூர் ஆகிய கிராமங்கள் சேர்ந்து நடத்தும் இவ்விழாவை பல்வேறு சூழ்நிலை காரணமாக மைலம்பட்டிகிராமத்தினர்மட்டும்எருதுவிடும்திருவிழாவைநடத்தினர்.இந்தஎருதுவிடும் திருவிழாவிற்கு 5 காளைகள் பங்கேற்று இருந்தன. மைலம்பட்டி கிராமத்தை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட கிராம மக்கள் விழாவில் பங்கேற்றிருந்தனர். போச்சம்பள்ளி போலீசார் பாதுகாப்பு அளித்தனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் (06.02.2026) மதுரை மாவட்டம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை சார்பில் தல்லாகுளம் அருகில் அதி நவீன உணவு பகுப்பாய்வுப் பிரிவில் புதிய நுண்ணுயிரியல்ஆய்வுக்கூடத்தினைகுத்துவிளக்கேற்றிதுவக்கிவைத்துபார்வையிட்டார்.

## அச்சிறுப்பாக்கம் அருகே

## சிறந்த ஊராட்சிக்கான விருது பெற்ற முருங்கை கிராமம்

### டெல்லி பஞ்சாயத்து ராஜ்ஜியம் சார்பில் வழங்கப்பட்டது

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட முருங்கை ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவராக இருப்பவர் உமா மகேஸ்வரி மணவாளன் இவர்கள் ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து ஊராட்சியில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பொதுமக்களுக்கு தேவையான அனைத்து வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொண்டு வருவதால் இந்த ஊராட்சியை மத்திய குழு ஆய்வு செய்ததில் முருங்கை ஊராட்சி சிறந்த ஊராட்சி என டெல்லியில் உள்ள பஞ்சாயத்து ராஜ்ஜியம் அமைச்சர் கிரண் குமார்



அவர்களின் திருக்கரங்களால் முருங்கைஊராட்சிமன்ற தலைவர் உமா மகேஸ்வரி மணவாளன் அவர்களுக்கு சிறந்த ஊராட்சிக்கான விருது வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

## மதுராந்தகம் அருகே புதிய புரட்சி கழகம் கட்சியின் தலைவர் ஓ.இ. ஷங்கர் பிறந்தநாளில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே கொல்லம்பாக்கத்தில்



புதிய புரட்சி கழகம் கட்சியின் தலைவர் ஓ.இ. ஷங்கர் பிறந்தநாளில் மாவட்டத் தலைவர் வி.எம்.மாரிமுத்து ஏற்பாட்டில் இனிப்புகள் வழங்கியும் கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது

இந்நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு எம்.இளங்கோவன் மதுராந்தகம் தெற்கு ஒன்றியம், செய்திருந்தார் இந்நிகழ்ச்சியில் கட்சியின் நிர்வாகிகள் எம் பாலாஜி ஒன்றிய தலைவர், ஆர் சந்துரு ஒன்றிய பொருளாளர், ஒன்றிய அமைப்பாளர் குமார், துணைத் தலைவர் முத்துலிங்கம்,கார்த்திக், முருகன், லோகேஷ், விஜி, மனோஜ், கௌதம், ஆனந்தன், சேகர், துரை பாபு, சசி, தானேஸ்வரன் மற்றும் ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு வழங்கியும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

## கீழக்கோட்டையில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம்



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது.

பள்ளி மேலாண்மை குழுத் தலைவி நித்யா தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் தெய்வானை முன்னிலை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை மேலாண்மை குழு கூட்டத்திற்கான கூட்டப் பொருட்களான திறன் இயக்கம் எண்ணும் எழுத்தும் உயர் கல்வி வழிகாட்டி அனைத்து குழந்தைகளும் பள்ளியில் உள்ளடக்கிய கல்வி மதிப்பீடு முன்னாள் மாணவர்கள் மகிழ் முற்றம் மன்றச் செயல்பாடுகள் குறித்தும் விரிவாக விளக்கிக் கூறினார். வானவில் மன்ற செயல்பாடுகள் தேசிய அறிவியல்தினத்தைமுன்னிட்டு அறிவியல் கண்காட்சி நடத்துவது குறித்தும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி விளக்கி கூறினார். பள்ளி மாணவ மாணவிகள் அனைவருக்கும் தன் சொந்த செலவில் காலணிகள் மற்றும் காலுறைகள் வழங்கிய ஜப்பான் தொழிலதிபர் பிரபு அவர்களுக்கு பள்ளி மேலாண்மை குழு சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியர்கள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா பள்ளி மேலாண்மை குழு செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பர்கூர் காவல் துணை கண்காணிப்பாளராக பொறுப்பேற்பு



கிருஷ்ணகிரி மாவட்டம்,பர்கூர் உட்கோட்ட காவல் துணைகண்காணிப்பாளராகசுரேஷ்குமார்04.02.2026 அன்று பொறுப்பேற்றுக்கொண்டார். நாமக்கல் கிரைம் பிராஞ்ச் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்த நிலையில், பர்கூருக்கு மாற்றப்பட்டார். அலுவலகத்தில் கோப்புகளில் கையெழுத்திட்டு பணிகளைத் தொடங்கியவரை, பர்கூர் உட்கோட்டத்திற்குட்பட்ட காவல் ஆய்வாளர்கள்,உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் நேரில் சந்தித்து வாழ்த்தினர். நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக முடித்து,சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் சிறப்பு கவனம் செலுத்தப்படும் என சுரேஷ்குமார் தெரிவித்தார்.



சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் ஓலைப்பட்டி காட்டுவளவு கிராமத்தைச் சேர்ந்த வயதான மூதாட்டி 70 வயதுடைய பாப்பா அவருடைய கணவன் பெயர் மல்லு கணவனை இழந்த மூதாட்டி இவருக்கு ஒரே மகன் சசிகுமார் வயது 38 இந்த மூதாட்டி பல ஆண்டுகளாக சேலம் கலெக்டர் அலுவலகத்தில் இலவச மின் இணைப்பு வழங்க கோரி பலமுறை மனு கொடுத்தும் இதுவரை எந்த பயனும் இல்லை. முதலமைச்சரிடம் இலவச மின் இணைப்பு வழங்க மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை மேட்டூர் மின் இணைப்பு அதிகாரி நாகமணி அவர்களால் மின் இணைப்பு வழங்க தடை செய்யப்பட்டு வருகிறது.

## கோவை புலியகுளம் பகுதியில் அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் சார்பாக

## பொதுமக்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் வரும் 8ம் தேதி நடைபெற உள்ளது



கோவை மாவட்ட பார்வைஇழப்பு தடுப்பு சங்கம், கோவை சிவாஜி காலனி பகுதியில் இயங்கும், அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை, மற்றும் கோவை அரவிந்த் கண் மருத்து வமனை இணைந்து நடத்தும் இலவச மாபெரும் கண் பரிசோதனை முகாம் வரும் எட்டாம் தேதி கோவை புலியகுளம் பகுதியில் உள்ள புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் நடைபெற உள்ளது. இந்த கண் பரிசோதனை சிறப்பு முகாமில், பொதுமக்களுக்கு இலவசமாக கண்புரை நோய்,நீர் அழுத்த நோய்,மாலைக்கண் நோய்,மாறுக்கண்,சீல் நீர் வடிதல்,துரப்பார்வை, ஆகியவற்றிற்கான பரிசோதனைகள் இலவசமாக செய்யப்படும் எனவே இந்த கண் பரிசோதனை முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூக ஆர்வலரும், வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் தெரிவித்துள்ளார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தலைமையில் மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துவாத சாந்தம் மாநாட்டு மையத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு விழாவை துவக்கி வைத்து வளைகாப்பு சீர்வரிசைகள் வழங்கினார். மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன்,இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி க.வானதி அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்.

# திட்டக்குடி அருகே ரூ.5.72 கோடியில் புதிய உயர்மட்ட மேம்பாலம்
## அமைச்சர் சி.வெ.கணேசன் அடிக்கல் நாட்டினார்



கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி எரப்பாவூர்-நரசிங்கமங்கலம் - தாழநல்லூர் சாலையில் உள்ள பழைய தரைப்பாலத்திற்கு பதிலாக, புதிய உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிக்கு தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டினார். நெடுஞ்சாலைத் துறை சார்பில் நபார்டு மற்றும் கிராம சாலைகள் மாநில நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 5 கோடியே 72 லட்சம் மதிப்பீட்டில் இந்தப் பாலம் கட்டப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளர் சேதுபதி, உதவி கோட்ட பொறியாளர் இளங்கோவன், உதவி பொறியாளர் சந்தியா ஆகியோர் கலந்துகொண்டனர்.மேலும்,ஒப்பந்ததாரர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் காமராஜ், திமுக மங்களூர் தெற்கு ஒன்றிய செயலாளர் செங்குட்டுவன், விருத்தாச்சலம் தெற்கு ஒன்றிய செயலாளர் வேல்முருகன் உட்பட திமுக நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் என திரளானோர் பங்கேற்றனர். நீண்ட நாள் கோரிக்கையான இந்த உயர்மட்ட மேம்பாலப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# மேல்மருவத்தூர் அருகே பாட்டாளி மக்கள் சமத்துவ திருமணம்
## ஆன்மிக மக்கள் தொண்டு இயக்கத்தலைவர் கோ.ப.அன்பழகன் நடத்தினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள சித்தாமூர் ஒன்றியம் சிறுகருணை கிராமத்தில் வசித்து வரும் பாட்டாளி மக்கள் நரிக்குறவர் தம்பதியான வரலட்சுமி மாறன் ஆகியோருக்கு வேல்மருவத்தூர் ஆன்மீக மக்கள் தொண்டு இயக்க தலைவர் கோ.ப.அன்பழகன் தலைமையில் இலவச திருமண விழா தமிழ் பாரம்பரிய முறைப்படி சீர் வரிசை வழங்கி திருமணத்தை நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தினார். முன்னதாக ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கம் சார்பில் முகூர்த்த மேடையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு திருமணத்திற்கு வருகைதந்த செவ்வாடை தொண்டர்கள் பொது மக்களுக்கு அட்சதை வழங்கினர். அதன் பின்னர் வண்ணமலர்கள் அட்சதை தூவி மணமக்களை வாழ்த்தினர். இந்நிகழ்வில் இரும்புலி ஊராட்சி மன்ற தலைவர் சூர்யாகலா மன்மதன், உட்பட விழாவிற்கு உண்டான அனைத்து ஏற்பாடுகளும் ஆன்மிக மக்கள் தொண்டு இயக்க யக்குனர் ஜி.கே.சதீஷ்குமார், சுந்தரம், சிவகுமார் லிங்கநாதன் கண்ணன் குமரன் ஆகியோர் செய்திருந்தனர் இதில் செவ்வாடை தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

### கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்வி நிறுவனங்கள், சிஐஐ அமைப்பு இணைந்து நடத்திய
# 'நீலகிரி இம்பாக்ட் சேலஞ்ச் 2026' எனும், தலைப்பில் நீலகிரி மலைப்பிரதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட 6 மாணவர் அணிக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது



கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்வி நிறுவனங்கள் மற்றும் சிஐஐ அமைப்பு இணைந்து நடத்திய நீலகிரி இம்பாக்ட் சேலஞ்ச் 2026 எனும் போட்டியில், நீலகிரி மலைப்பிரதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட 6 மாணவர் குழுக்கள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.

கோவை குமரகுரு கல்வி நிறுவனங்கள், இந்தியத் தொழில் கூட்டமைப்பு,நீலகிரி எகனாமிக் டயலாக் மற்றும் நீலகிரி மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்திய 'நீலகிரி இம்பாக்ட் சேலஞ்ச் 2026' என்ற போட்டியை நடத்தியது

நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழல் மற்றும் நிர்வாகம் சார்ந்த முக்கியப் பிரச்சினைகளுக்குத் தொழில்நுட்ப ரீதியான தீர்வு காணும் விதமாக நடைபெற்ற இந்த போட்டியில்,நாடுமுழுவதிலும் இருந்து 21 மாணவர் குழுக்கள் கலந்து கொண்டது.

சுற்றுலாப் பயணிகள் வருகையை நிர்ணயித்தல், ஆக்கிரமிப்புத் தாவரங்களைக் களைதல், பழங்குடியின மக்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட 6 தலைப்புகளின் கீழ், நடைமுறைக்கு உகந்த தீர்வுகளை வெளிக்கொண்டு வந்த 6 மாணவர் குழுக்கள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டனர். இதன் நிறைவு விழா கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில், போர்ஜ் அகாடமியின் முதன்மைத் திட்ட அதிகாரி பி. எல்.லட்சுமி மீரா கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றினார் அப்பொழுது அவர் பேசுகையில், "இது வழக்கமான போட்டிகளைப் போன்றது அல்ல. குறிப்பிட்ட இடத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் 'இடச் சார்ந்தக் கண்டுபிடிப்பு' முயற்சியாகும். திறம்பட தீர்வுகளை கூறிய மாணவர்களுக்கு வாழ்த்துகள்" என்றார். இந்த நிகழ்ச்சியில் சிஐஐ கோவை மண்டலத் தலைவரும், சால்சர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குநருமான ராஜேஷ்துரைசாமி,குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் சங்கர் வானவராயர் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் சூழலியல் ஆர்வர்லர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

# தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழடி அரசு மேல்நிலைப்பள்ளி, திருப்புவனம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்புவனம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அல்லிநகரம் அரசு மேல்நிலைப் பள்ளி,பழையனூர் அரசு மேல்நிலைப்பள்ளி, திருப்பாச்சேத்தி அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் வழங்கி உரையாற்றினார்.

இந்நிகழ்வில் திருப்புவனம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.ஏ. கடம்பசாமி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் முருகன், மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் டி.ஆர்.சேகர், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் வெங்கட சுப்பிரமணியன், பள்ளி தலைமை ஆசிரியர்கள் அனுராதா, இந்திரா, உதவி தலைமை ஆசிரியர் வீரப்பன், ஆசிரிய பெருமக்கள், மாணவச் செல்வங்கள், அரசு அலுவலர்கள் மற்றும் கட்சிநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில்
# எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்நேற்று(06.02.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த அனைத்து துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

எச்.ஐ.வி / எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் திட்டங்களில் முன்னுரிமை அளித்து மருத்துவ பயனாளிகளுக்கு விரைவாக சென்றடைதல் தொடர்பாகவும், துறை சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும்எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய விழிப்பிணர்வு ஏற்படுத்துதல் தொடர்பாகவும், எச்.ஐ.வி / எய்ட்ஸ் தடுப்பு சட்டம் 2017 குறித்து விழிப்பிணர்வு ஏற்படுத்துவது குறித்தும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. எச்.ஐ.வி / எய்ட்ஸ் ஆல் பாதிக்கப்பட்ட மற்றும் பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி மற்றும் ஊட்டச்சத்து ஆதரவு நிதி மாதந்தோறும் ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கூட்டு மருந்து சிகிச்சை பெறும் வரும் மருத்துவ பயனாளிக்கு இலவச பேருந்து பயண அட்டையும், உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000/- ஓய்வூதிய தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கூட்டத்தில் எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்றுள்ளோர்களுக்கு சமூக நலத்திட்ட உதவிகள் கிடைக்க ஆவண செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில்இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.ஜெயந்தி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, மாவட்ட திட்ட மேலாளர் (எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு) துரைசாமி, மருத்துவர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரை காவல் துணை கண்காணிப்பாளராக இராமமூர்த்தி பொறுப்பேற்பு



கிருஷ்ணகிரி மாவட்டம்,ஊத்தங்கரை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக இராம்மூர்த்தி நேற்று 06.02.2026 றெுப்பேற்றுக்கொண்டார். தருமபுரி மாவட்ட குற்றப்பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்த நிலையில், ஊத்தங்கரைக்கு மாற்றப்பட்டார். அலுவலகத்தில் கோப்புகளில் கையெழுத்திட்டு பணிகளைத்தொடங்கியவரை,ஊத்தங்கரைஉட்கோட்டத்திற்குட்பட்ட காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் நேரில் சந்தித்து வாழ்த்தினர்.நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக முடித்து, சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் சிறப்பு கவனம் செலுத்தப்படும் என இராமமூர்த்தி தெரிவித்தார்.



ஈரோடு மாநகராட்சி முதலாம் ஆண்டு விளையாட்டு விழா 2026 இன்று (07.02.2026) சனிக்கிழமை காலை 07:30 மணிக்கு மேல் மாநகராட்சி வ.உ.சி பூங்கா மைதானத்தில் நடைபெற உள்ளதை முன்னிட்டு (04.02.2026) அன்று முதல் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கப்பட்டது. ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் மாநகராட்சி மைய அலுவலக கிரிக்கெட் அணியில் விளையாடினார். போட்டிகளில் மாநகராட்சி அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்ட போலீஸ் துறையில் பயன்பாட்டிலிருந்து கழிவு செய்யப்பட்ட நான்கு சக்கர வாகனங்கள் 6, இருசக்கர வாகனங்கள் 9 என மொத்தம் 15 வாகனங்கள் வரும் 9 ஆம் தேதி காலை 10 மணிக்கு சேலம் குமாரசாமி பட்டியில் உள்ள மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் பொது ஏலம் விடப்பட உள்ளது. இந்த வாகனங்களை நாளை முதல் நேரில் பார்வையிடலாம். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் நான்கு சக்கர வாகனத்திற்குரூ.5000,இருசக்கரவாகனத்திற்கு ரூ.2000 முன்பணம் செலுத்தி டோக்கன் பெற வேண்டும். டோக்கன் பெற்றவர்கள் மட்டுமே ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர் என மாவட்ட எஸ்பி கௌதம் கோயல் தெரிவித்துள்ளார்.

# கே.என்.ஜி. புதூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா

## ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம் வழங்கினர்



கோவைகாசிநஞ்சேகவுண்டன் புதூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா வெகுவிமர்சையாக நடைபெற்றது. யாகசாலையில் ஆறு கால யாகங்கள் நடத்தி கோவில் கோபுரம், மற்றும் இராஜகோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் சுற்றுப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பக்த்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அனைவருக்கும் மகா அன்னதானம் நடைபெற்றது.

கோவைகாசிநஞ்சேகவுண்டன் புதூர் பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில். இக்கோவிலில் விநாயகப் பெருமான், முருகப் பெருமான், ஆதிநாரயண பெருமாள், அபிராமி உடனமர் அமிர்தகடேஷ்வரர் உள்ளிட்ட பரிவார தெய்வங்கள் அருள்பாளித்து வருகின்றன.

இந்நிலையில் கோவில் புணரமைக்கப்பட்டு திருக்குட நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா 12 ஆண்டுகளுக்கு பிறகு விமர்சையாக நடைபெற்றது. இதில் கடந்த ஞாயிறன்று மஹா கணபதி ஹோமத்துடன் திருக்குட நன்னீராட்டு பெருவிழா நிகழ்ச்சி தொடங்கியது.

திங்கட்கிழமை பஞ்சகவ்ய பூஜை, மூர்த்தி ஹோமம், சாந்திஹோமம், தீபாரதனை நடைபெற்றது. தொடர்ந்து சுப்பிரமணியம்பாளையம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் இருந்து முளைப்பாரி மற்றும் தீர்த்தக்குடம் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து முதற்கால வேல்வி பூஜைகள் நடைபெற்றது.

புதன் கிழமை இரண்டாம் கால வேள்வி மற்றும் மூன்றாம் கால வேள்வி யாகங்களும் நடைபெற்றது. அதேபோல் வியாழன்று நான்காம் கால வேள்வி, ஐந்தாம் கால வேள்விகள் நடைபெற்றது. வெள்ளிக்கிழமை 108 மூலிகைகளைக் கொண்டு ஆறாம் கால வேள்வி நடைபெற்றது. இதையடுத்து புனித நீர் கலசங்கள் கோவிலைச் சுற்று ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு. கோவில் மூல கோபுரம் மற்றும் இராஜகோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு திருக்குட நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா நடைபெற்றது. தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அலங்கார பூஜைகள் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் டிரோன் மூலம் புனித நீர் தெளிக்கப்பட்டது. கும்பாபிஷேக பூஜைகளை கோவை ஸ்ரீ சாஸ்தா விஷ்ணு திருக்கோவில் சிவாமகரத்னம் மோகன் குருக்கள் குழுவினர் மற்றும் திருக்கோவில் அர்ச்சகர் சிவக்குமார் ஆகியோர் நடத்திவைத்தனர்.

இறுதியாக கொங்கு ஜமாப் நண்பர்கள் குழுவினரின் ஜமாப் இசை நிகழ்ச்சி மற்றும் ஒயிலாட்டம் நடைபெற்றது. இவ்விழாவில் மங்கள இசை, கேரள செண்டை மேளம் மற்றும் விருந்தீஸ்வரர் திருக்கோவில் சிவவாத்திய இசை குழுவினரின் இசை உள்ளிட்டவைகள் இசைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் உள்பட சுற்று வட்டாரங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஆயிரக்கணக்காணவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் செய்திருந்தனர்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (06.02.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாவட்ட குடும்ப நலத் துறையின் சார்பில் நடைபெற்ற மருத்துவர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த மருந்துவர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார். . உடன் இணை இயக்குநர் ஜெயந்தி உட்பட பலர் உள்ளனர்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உலக தர உணவு சேவை மற்றும் சூழலியல் சுற்றுலா திறன்பயிற்சி வழங்கப்பட உள்ளது

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அறிவிப்பு



தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு இதன் பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. தொடர்ச்சியாக தற்போது தாட்கோ சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உலக தர உணவு சேவை மற்றும் சூழலியல் சுற்றுலா திறன்பயிற்சி (Global Food & Beverage Service Eco-Tourism), உயர் தொழில்நுட்ப Al பயிற்சி (Advanced Artificial Intelligence(AI)), ஆடை வடிவமைப்பு (ம) மேலாண்மை திறன் பயிற்சி (Apparel & Designing Management) மற்றும் அழகுக்கலை (ம) சிகை அலங்கார மேலாண்மை திறன் (Glam and Cosmetology Salon Management) ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களாகவும், உலக தர உணவு சேவை மற்றும் சூழலியல் சுற்றுலா திறன் பயிற்சி (Global Food & Beverage Service Eco- Tourism), உயர் தொழில்நுட்ப Al பயிற்சி (Advanced Artificial Intelligence(AI)), போன்ற பயிற்சிகளுக்கு 18 முதல் 25 வயது வரை உள்ளவர்களாகவும் கல்வி தகுதியாக பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும், ஆடை வடிவமைப்பு (ம) மேலாண்மை திறன் பயிற்சி (Apparel & Designing Management) மற்றும் அழகுக்கலை (ம) சிகை அலங்காரமேலாண்மை திறன் பயிற்சி (Glam and Cosmetology Salon Management) போன்ற பயிற்சிகளுக்கு 18 முதல் 40 வயது வரை உள்ளவர்களாகவும் கல்வி தகுதியாக பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பிற்கு வழி வகை செய்யப்படும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

இப்பயிற்சியினை பெற தாட்கோ இணையதளமான (www.tahdco.com) என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சிக்கான கால அளவு மூன்று மாதங்கள் ஆகும். மேலும் சென்னையில் உள்ள விடுதியில்தங்கிபடிக்கும் வசதி மற்றும் உணவுக்கான செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும் 601 ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

மேலும்விபரங்களுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகம், 6வது தளம். மாவட்ட ஆட்சியர் தொலைபேசி எண் - 0424 - 2259453 அணுகவும்.அலுவலகம், ஈரோடு.



சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உள்ள அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்கள், ஊதிய உயர்வு கோரி கல்லூரி நுழைவாயில் முன்பாக முழக்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.,நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ஊதிய உயர்வை உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தி அவர்கள் கோஷங்கள் எழுப்பினர்.

# வேப்பூரில் நவீன வசதிகளுடன் புதிய மருத்துவமனைக்கட்டிடம் திறப்பு

## எம்.ஆர்.ஆர். ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. குத்துவிளக்கேற்றினார்



கடலூர் மாவட்டம், வேப்பூர் அரசு மருத்துவமனையில் 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கூடுதல் கட்டிடத்தை நேற்று பிப்ரவரி 6 வெள்ளிக்கிழமை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில் விருத்தாச்சலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் நேரில் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி புதிய கட்டிடத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைத்தார்.

இந்த கட்டிடத்தின் தரைத்தளத்தில் வரவேற்பு அறை, வெளிநோயாளிகள் பிரிவு, ஆய்வகம், பிரசவ அறை மற்றும் அவசர சிகிச்சை வார்டு உள்ளிட்ட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. முதல் தளத்தில் அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கம், செவிலியர் அறை மற்றும் நோயாளிகள் தங்கும் வார்டுகள் உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திறப்பு விழா நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவத்துறை இணை இயக்குனர்சவிதா,வேப்பூர் அரசு தலைமை மருத்துவர் ஆசித், மருத்துவர்கள் திவ்யா, கார்த்திகேயன் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக, வேப்பூர் சாய் அப்போலோ நர்சிங் கல்லூரி மாணவர்கள் சார்பில் சட்டமன்ற உறுப்பினருக்கு மலர் தூவி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# தாய், தந்தையின் கனவை மாணவர்களாகிய நீங்கள் நிறைவேற்றி கொடுக்க வேண்டும்

## எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ. பேச்சு





தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் திருமண்டலம் புதுக்கோட்டை பி.எஸ். பெரிய நாயகம் மேல்நிலைப்பள்ளியில் 198 மாணவமாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி சண்முகையா வழங்கி பேசியபோது: மாணவர்கள் அனைவருக்கும் கல்வி மட்டுமே சிறந்தது அதுதான் உங்களுக்கு சொத்து அதனால் அனைத்து மாணவர்களும் நன்றாக படிக்க வேண்டும் அன்போடு பாசத்தோடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் தாய் தந்தையின் கனவை நீங்கள் நிறைவேற்றிகொடுக்கவேண்டும் நாட்டுக்கும் வீட்டுக்கும் சேவை செய்ய வேண்டும் என்று பேசினார். தொடர்ந்து குமாரகிரி ஊராட்சி பகுதியில் கிராம ஊராட்சி செயலக கட்டிடத்தை எம்.சி சண்முகையா திறந்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அதன் பிறகு மறவன் மடம் ஊராட்சிபகுதியில்பொது விநியோகம் கடை கட்டிடத்தை திறந்து வைத்து ரேஷன் பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கினார். தொடர்ந்து கோரம்பள்ளம் ஊராட்சி பகுதியில் பொது விநியோகம் கடை கட்டிடத்தை திறந்து வைத்து ரேஷன் பொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமையாசிரியர் செ.சேப்பார் ஜோதிபால் தலைமை வகித்தார்.

தூத்துக்குடி யூனியன் ஆணையாளர்ஹகோர்ட் ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர் சின்னத்துரை, மத்திய ஒன்றிய தி.மு.க செயலாளர் கே.கே.ஆர் ஜெயக்கொடி, மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் கே.பி.ராஜா ஸ்டாலின், ஒன்றிய துணை செயலாளர் ஹரிகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி வெயில்ராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சண்முக நாராயணன், ஒன்றிய தகவல் தொழிற்நுட்ப அணி அமைப்பாளர் மணிகண்டன், ஒன்றிய கலை இலக்கிய அணி அமைப்பாளர் பொன்னரசு, தொண்டரணி சைமன், சக்திவேல், புதுக்கோட்டை ஜெபமணி ஜெபக்குமார், சற்குணம், செயற்குழு உறுப்பினர் அருள், ஆசிரிய, ஆசிரியைகள், மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்து கொண்ட அழகப்பா அரசு கலைக் கல்லூரி தேசிய மாணவர் படை மாணவருக்குப்பாராட்டு



டெல்லியில் நடைபெற்ற நம் நாட்டின் குடியரசு தின விழா அணிவகுப்பில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் தேசிய மாணவர்படை மாணவர் வசந்த பாரதி கலந்துகொண்டு பெருமை சேர்த்தார்.காரைக்குடி தேசிய மாணவர் படை ஒன்பதாவது பட்டாலியன் சார்பாக அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் இளங்கலை இறுதியாண்டு வரலாறு பயிலும் தேசிய மாணவர் படை மாணவர் வசந்த பாரதி டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் தேசிய மாணவர் படையின் சார்பில் கலந்து கொண்டு சிறப்பித்தார். பின் அங்கிருந்து சென்னைவந்துகாரைக்குடி வந்த அவருக்கு, ரயில் நிலையத்தில் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் தேசிய மாணவர் படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் மற்றும் மாணவர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். காரைக்குடி ஒன்பதாவது பட்டாலியன் மற்றும் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் சார்பாக சிவகங்கை மாவட்டத்திலிருந்து குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்து கொண்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர் வசந்த பாரதியை கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி, வரலாற்றுத்துறைத் தலைவர் முனைவர் நிலோபர்பேகம், இயற்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கவிதா மற்றும் கல்லூரியின் தேசிய மாணவர் படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரவணன் மற்றும் ஆசிரியர்களும், ஆசிரியரல்லாப் பணியாளர்களும், பாராட்டி வாழ்த்தினர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.